செ.வெ.எண்:64 நாள்:28.08.2019

# கரூர் மாவட்டம்

தமிழ்நாட்டில் மானாவாரி நிலங்களை மேம்படுத்தி, வேளாண் உற்பத்தியினை பெருக்கும் வகையில் நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம் என்ற திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2016-17 முதல் 2019-20 வரையில் 1000 எக்டர் கொண்ட மானாவாரி நிலத்தொகுப்புகள் தேர்வு செய்யப்பட்டு, பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் ரூ.802.90 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2019-20 ஆம் நிதியாண்டில் விவசாயிகள் வேளாண் விலைபொருட்களை மதிப்புக் கூட்டி, அதிக இலாபம் பெறும் வகையில், மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள் 75 சதவிகித மானியத்தில் அமைத்திட மூன்றாம் கட்டமாக 24 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் மானாவாரி தொகுப்புகளிலுள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்பு அல்லது கூட்டுப் பண்ணைய திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு அந்தந்த தொகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களை மதிப்புக் கூட்டுவதற்காக, மதிப்பு கூட்டும் இயந்திர மையங்கள் அமைத்திட மானியம் வழங்கப்படுகிறது. விளைபொருட்களை சுத்தப்படுத்துதல், தரம் பிரித்தல் விற்பனைக்கேற்ற வகையில் பேக்கிங் செய்தல் உள்ளிட்டப் பல்வேறு பணிகளுக்கான மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் கொள்முதல் மற்றும் பணி மூலதனத்திற்கான மொத்த தொகையில் 75 சதவீதம் அல்லது ரூ.10 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை அரசு மானியமாக வழங்கப்படுகிறது. மீதமுள்ள 25 சதவீதத் தொகை உழவர் உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் உழவர் உற்பத்திக்குழுவின் பங்களிப்பாக செலுத்தப்படுகிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட தொகுப்பிலுள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழு சேர்ந்து பெரிய அளவிலான மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள் ரூ.10 இலட்சத்திற்கும் அதிகமான தொகையிலும் அமைக்க அனுமதிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் மதிப்புக் கூட்டு இயந்திரங்களை வேளாண் பொறியியல் துறையின் மூலம் விலை நிர்ணயம் செய்து அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து வாங்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் ஒரு இடத்தில் மதிப்புக்கூட்டு இயந்திர மையம் அமைக்கப்பட்டு, பல்வகை எண்ணை பிழிந்தெடுக்கும் கருவிகள் (மரச்செக்குகள்), உள்ளிட்ட பல்வேறு இயந்திரங்கள் வாங்கப்பட்டு இலாபகரமான முறையில் இயங்கி வருவதால், விவசாயிகளிடம் நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது. பொதுமக்கள் தங்கள் தேவைக்கு இந்த மையங்களை அணுகி மதிப்புக்கூட்டப்பட்ட விளைபொருட்களை பெற்றுக்கொள்ளலாம், மற்றும் இரண்டு இடங்களில் மதிப்புக்கூட்டு இயந்திர மையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று, நடப்பு நிதியாண்டிலும் மூன்றாவது கட்டமாக 150 மதிப்புக்கூட்டு இயந்திர மையங்களை அமைக்க தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. நமது மாவட்டத்தில் 4 மதிப்புக்கூட்டு இயந்திர மையங்கள் அரசு நிதி ஒதுக்கியுள்ளது. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த FPO/FPG (உழவர் உற்பத்தியாளர் அமைப்பு / உழவர் உற்பத்தியாளர் குழு) மூலம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது.

**<u>விண்ணப்பிக்கும் முறை:</u>**

மதிப்புக் கூட்டும் இயந்திர மையம் அமைக்க ஆர்வமுள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்பு / உழவர் உற்பத்தியாளர் குழு விண்ணப்பத்தினை உரிய ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட மானாவாரி தொகுப்பு மேம்பாட்டு குழுவிடம் வழங்க வேண்டும். தொகுப்பு மேம்பாட்டுக் குழு, விண்ணப்பத்தினை சம்மந்தப்பட்ட வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளருக்கு பரிந்துரை செய்யும்.

பின்னர் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட அளவிலான குழுவின் ஒப்புதல் பெறப்படும். பின்னர் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனங்களுக்கு உதவி செயற்பொறியாளர் அவர்களால் மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வழங்கிட பணி ஆணை வழங்கப்படும். இயந்திரங்கள் வழங்கப்பட்டு, மதிப்புக் கூட்டும் இயந்திர மையம் நிறுவப்பட்டபின் உதவி செயற்பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு இயந்திரங்கள் திருப்திகரமாக செயல்படுகிறது என்ற அறிக்கையினை உழவர் உற்பத்தியாளர் அமைப்பு அல்லது உழவர் உற்பத்தியாளர் குழுவிடமிருந்து பெற்ற பின்னரே, சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தொகுப்பு மேம்பாட்டுக் குழுவின் மூலம் மானியத் தொகை விடுவிக்கப்படும்.

எனவே, இத்திட்டத்தின்கீழ் பயன்பெற ஆர்வமுள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழு தங்கள் விண்ணப்பத்தினை சம்மந்தப்பட்ட தொகுப்பு மேம்பாட்டுக் குழுவிற்கு அளித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**<u>விவசாயிகள் அணுக வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்:</u>**

செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 107, நவலடியான் காம்ப்ளெக்ஸ், அண்ணாநகர், மில்கேட், தாந்தோணிமலை அஞ்சல், கரூர் - 639 005. தொலைபேசி எண்: 04324 255850

உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 77/1 ராமச்சந்திரா காம்ப்ளக்ஸ், முதல் தளம், கருப்பக்கவுண்டன்புதூர் பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் - 639 004.

உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 20-G4 பரிசல் துறை ரோடு, பெரியபாலம், குளித்தலை – 639 104.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**